தமிழ் நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1969 சனவரி 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒற்றிவைக்கப்பட்ட கேள்வி எண் 17 இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையம் கருங்காலக்குடி.

*17 வினா.—**திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வடக்கு ஒன்றியத்தில் கருங்காலக்குடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது கட்டட வேலை தொடங்கப் பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, கருங்காலக்குடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னது, அரசின் நிதிப் பற்றுக்குறை காரணமாகத்தான் என்று நான் கருதுகிறேன். மக்கள் ஏதாவது பங்குத் தொகை செலுத்தினால், அங்கு கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிதிப் பற்றுக் குறைதான் அதற்குக் காரணம். மக்கள் பங்குத் தொகை அதிகமாகக் கிடைக்குமானால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : பொதுவாக, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கே சொந்தமாக கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. கிராமங்களில் இருக்கின்ற காரணத்தாலும், கட்டடங்கள் இல்லாத காரணத்தாலும், டாக்டர்கள் வரப் பயப்படுகிறார்கள். ஆகையால், இதையெல்லாம் கருதி, வருகிற பட்ஜெட்டிலாவது கணிசமான அளவுக்கு நிதி ஒதுக்கி, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கென்றே கட்டடங்கள் கட்ட அரசுக்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

[1969 சனவரி 29

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக வாடகைக் கட்டடம் கூடக் கிடைக்காத கிராமங்களிலாவது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கென கட்டடங்கள் உடனடியாகக் கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

மதுராந்தகத்தில் தொழிற்பேட்டை.

* 21. வினா—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகத்தில் தொழிற்பேட்டை ஆரம்பிக்கிற செயற் குறிப்பு ஏதேனும் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, மதுராந்தகம் பகுதி விவசாயப் பகுதியாக இருந்து கொண்டிருப்பதால், அங்கே ஒரு தொழில் பேட்டை அவசியம் உருவாக்க வேண்டியிருக்கிறது. அப்படி உருவாக்க வேண்டுமானால், அதற்கு என்ன, என்ன சாத்தியக்கூறுகள் தேவை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தொழிற்பேட்டைகள் துவக்குவதைக் குறித்து முதலிலே ஏற்றுக் கொண்ட கொள்கையின் அடிப்படையில், ஒவ்வொரு வருவாய் வட்டாரத்திலும் ஒரு தொழிற்பேட்டையாவது இருக்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், 48 வருவாய் வட்டாரங்களில் 32 வருவாய் வட்டாரங்களில் தொழிற் பேட்டைகள் அமைந்திருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும், அம்பத்தூரில் ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. மாதவரத்தில் ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. தனியார்த் துறையிலும் ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. வியாசர்பாடியில் கூட்டுறவுத் துறையில் ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. திருவள்ளூரில் எலெக்ட்ரானிக் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஒன்று வர இருக்கிறது. திருவள்ளூர் தாலுக்காவில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் போட்ட திட்டத்தின் அடிப்படையில் ஒரு தொழிற்பேட்டை வருகிறது. காஞ்சீபுரத்தில் ஒரு தொழிற் பேட்டை அமைந்திருக்கிறது. இப்பொழுது செங்கற்பட்டு மாவட்டத்தில் தொழிற்பேட்டை வைக்கப்படாமல் இருக்கும் வருவாய் வட்டம் செங்கற்பட்டு வருவாய் வட்டம்தான். அதையும் மதுராந்தகத்தில் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மதுராந்தகத்தில் தொழிற்பேட்டை வைக்கின்ற